[1971 டிசம்பர் 13

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாயூரம் நகராட்சியால் பேருந்து நிலையம் கட்டுவதற்கு இதுவரையில் ரூ. 1,70,284.37 செலவு செய்யப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : மாயூரம் நகராட்சிப் பேருந்து நிலையம் கட்டுவதற்கான மொத்த மதிப்பீட்டையும், அதற்கு நம் அரசாங்கம் கடனுகவும் மானியமாகவும் வழங்கியிருக்கிற தொகையையும், அந்த இடத்தில் பேருந்து நிலையம் எப்போது கட்டி முடிக்கப்பட இருக்கிறது என்பதையும் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 1,70,284.37. பேருந்து நிலையத்தில் மாற்று வேலைகள், பயணிகள் தங்குமிடம், டிக்கட்ஸ் கொடுக்கப்படும் இடம், அலுவலர்கள் அறை போன்றவைகளுக்கு கடனுக ரூ. 18,000 கொடுக்கப்பட்டது. அந்த ரூபாய் 18,000-ம் செலவழிக்கப்பட்டது. பிறகு ரூபாய் 40,000 கடனுகப் பெற்றுர்கள். அதையும் செலவழித்திருக்கிருர்கள். பிறகு ரூ. 15,000 பெற்றுர்கள். அதுவும் இந்த வகைகளுக்காகச் செலவழிக்கப்பட்டிருக்கிறது. நகராட்சிப் பேருந்து நிலையத்தில் கடைகள் கட்டுவதற்காக ரூ. 10,000 கொடுக்கப்பட்டது. ரூ. 18,263.55 காசு அதற்காகச் செலவழித்திருக்கிருர்கள். பிறகு நகராட்சி மன்ற பேருந்து நிலையத்தில் கட்டைச் சுவர் கட்ட, வட பாகத்தை அகலப்படுத்த ரூ. 15,000 கடன் பெற்றுர்கள். அதில் ரூ. 7,500-யை செலவிட்டுவிட்டு மீதி ரூ. 7,500-ஐ அரசாங்கத்தினிடம் திருப்பித் தந்திருக்கிருர்கள். மூன்றும் நிலைக்கட்டத்தில் ரூபாய் 20.000 பெற்றுர்கள். அதையும் செலவழித்திருக்கிருர்கள். கடைகள் கட்டுவதற்காக ரூ. 20,000 பெற்றுர்கள் 21—5—70-ல் மேற்கொண்டும் செலவாகியிருக்கிற அவ்வளவையும் சேர்த்து ரூ. 1,70,284.37.

*306 வினு—**திரு. கே. ஏ. வகாப்** : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராணிப்பேட்டையில் முனிசிபல் பஸ் நிலையம் அமைக்க அரசு கடன் தொகை எதும் வழங்கியுள்ளதா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. ஏ. வகாப் : இராணிப்பேட்டை பெரிய நகராட்சி. அங்கு பஸ்கள் வந்து தங்குவதற்கு போதிய இடவசதி இல்லை. ஷாப் வசதியும் இல்லை. ஆகவே அந்த முனிசிபாலிட்டி இது குறித்து தீர்மானம் போட்டு அரசாங்கத்தை அணுகியிருக்கிருர்கள். இப்போதாவது இதைக் கவனித்து ஆவன செய்வார்களா ?

1971 டிசம்பர் 13]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இராணிப்பேட்டையில் ஒரு பேருந்து நிலையம் கட்ட ஒரு லட்சம் ரூபாய் கடனும், கோட்டாசித் தலைவர் அலுவலகத்தில் 51 சென்ட் நிலமும் கேட்டார்கள். அதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மறுத்து விட்டார்கள். வேறு இடம் பார்த்த பிறகு கடன் கேட்டால் பிறகு யோசிக்கப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: எந்தெந்த முனிசிபாலிட்டிகளில் பஸ் ஸ்டான்ட்கள் கட்டப்பட்டிருக்கின்றன? எங்கெங்கு கட்டப்படும்? எவ்வளவு செலவாகும் என்பதற்கு ஏதாவது கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறதா இந்த அரசாங்கத்தினால்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தனிக் கேள்வி வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: பொதுவாக நகராட்சிமன்ற பஸ் நிலையங்களில் பப்ளிக் கன்வினியன்ஸ் இல்லை. இருக்கிற இடங்களில் கூட அவை சரிவர பராமரிக்கப்படவில்லை. அதனால் பொது மக்களின் சுகாதாரம் பாதிக்கப்படுகிற நிலை இருக்கிறது. ஆகவே, அதுகுறித்து ஆலோசித்து அரசாங்கம் ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: நகராட்சிமன்றங்களிலுள்ள பேருந்து நிலையங்களைக் கண்காணிக்கும் பொறுப்பை அந்தந்த நகராட்சி மன்றங்கள் மேற்கொண்டிருக்கின்றன. ஆகவே, குறைபாடுகள் இருக்குமானால் அதை அந்த அந்த நகராட்சி மன்றங்களின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். அப்படி அங்கு வசதிகள் ஏற்படுத்தப்படாமல் இருக்குமானால் ஏற்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளலாம். நகராட்சி மன்றங்கள் மூலம் அனுகினால் தக்க நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும்.

Report of National Labour Commission

" 307 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the report of the National Labour Commission has been received by the Government; and

(*b*) if so, whether the report will be placed on the Table of the House?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) ஆம்.

(இ) இவ்வறிக்கை ஐந்நூறுக்கும் மேற்கொண்ட பக்கங்களைக் கொண்டதாக இருப்பதால், அவையின் முன் வைக்க இயலவில்லை. உறுப்பினர்களின் பார்வைக்காக சில நகல்கள் சட்டப் பேரவையின் நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.